# லலித் அத்துலத்முதலி மஹபொல
# உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நதியம்

## வேலைவாய்ப்பு

லலித் அத்தலமுதலி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அரச அல்லது பகுதியளவிலான அரச நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள் முழு நேர சேவைக்கு விடுவிக்க முடியுமா என தமது நிறுவன பிரதானிகளின் பரிந்துரையுடன் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

## உதவி பணிப்பாளர் (நிதி) – (01 பதவி)

**1. கல்வி தகைமை அல்லது அனுபவம்:**

1.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முகாமைத்துவம், வியாபாரம், நிதி தொடர்பான பட்டத்துடன் அரச திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக நிறுவனமொன்றில் நிர்வாக, நிதி மற்றும் தகவல் தொடர்பாடல் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் இருத்தல்.

அல்லது

1.2. மூன்று வருட (03) சேவை அனுபவத்துடன் இலங்கை CA இன் பூரண தொழில் தகைமைகள் அல்லது அரச திணைக்களத்தின் / கூட்டுத்தாபனத்தின் / சபையின் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வியாபார நிறுவனமொன்றின் ஐந்து வருட (05) அனுபவத்துடன் இலங்கை CA பகுதியளவு தகைமை பெற்றவராக இருக்க வேண்டும்.

**2. சம்பள அளவுத்திட்டம்:**

MM 1-1 – 2016 : ரூ. (53,175/- 10x1,375 – 15x1,910 = 95,575/-
EPF -15%, ETF – 3%, வாழ்க்கைச் செலவு ,

## உள்ளக கணக்காய்வாளர் - (01 பதவி)

**1. கல்வி தகைமை அல்லது அனுபவம்:**

1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முகாமைத்துவம், வியாபாரம், நிதி தொடர்பான பட்டம் மற்றும் ICASL இன் பகுதிளவு தொழில் தகைமையுடன் குறைந்தளவு மூன்று வருட (03) அனுபவத்துடன் உள்ளக கணக்காய்வாளராக அரச திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக நிறுவனமொன்றில் உள்ளக கணக்காய்வு துறையில் அனுபவம் இருத்தல்.

அல்லது

1.2. மூன்று வருட (03) சேவை அனுபவத்துடன் இலங்கை CA இன் பூரண தொழில் தகைமைகள் அல்லது அரச திணைக்களத்தின்.˙.கூட்டுத்தாபனத்தின்.˙.சபையின் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வியாபார நிறுவனமொன்றின் கணக்காய்வு துறையின் ஐந்து வருட (05) அனுபவத்துடன் இலங்கை CA பகுதியளவு தகைமை பெற்றவராக இருக்க வேண்டும்.

**2. சம்பள அளவுத்திட்டம்:**

MM 1-1 – 2016 : ரூ. (53,175/- 10x1,375 – 15x1,910 = 95,575/-
EPF -15%, ETF – 3%, வாழ்க்கைச் செலவு ,

**வேறு:**
**அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும்,**

1. வயது 28 க்கு குறையாது 45 வயதுக்கு அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயது எல்லை கிடையாது.

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும் மற்றும் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களின் கடமைகளைச் செய்வதற்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும். சிறந்த ஒழுக்கம் இருக்க வேண்டும். ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் நல் புலமை இருத்தல் வேண்டும், தமிழ் மேலதிக தகைமையாக கருதப்படும்.

2. கட்டமைக்கப்பட்ட நேர்காணல் ஊடாக தெரி செய்யப்படும். முழுப் பெயர், பிறப்புத் திகதி, வயது, இனம், கல்வித்தகைமைகள், அனுபவம் மற்றும் வேறு விபரங்களுடன் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்கள் பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் பணிப்பாளர், லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம், 8ம் மாடி, சதொச செயலாளர் அலுவலக கட்டிடம், இலக்கம் 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் கடித உரையின் இடப்பக்க மேல் மூளையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு 2024.07.10 ம் திகதிக்கு முன்னதாக அனுப்பவும்.

1. கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். லலித் அத்தலமுதலி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியமானது விண்ணப்பங்களை தெரிவு செய்வதற்கான உரிமையை கொண்டுள்ளது.

2. கடைசித் திகதிக்குப் பிறகு பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் முழுமையடையாத விண்ணப்பங்கள் போக்குவரத்து அல்லது வேறு எந்தச் செலவுகளுக்காகவும் லலித் அத்துலத்முதலி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தால் திருப்பிச் செலுத்தப்படாது.

பணிப்பாளர்,
லலித் அதுலத்முதலி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
13.06.2024